பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

04 04 2025 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- மக்களவை நடவடிக்கைகள் இன்று மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.
- பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளுக்கு இடையே வர்த்தகத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.
- செயற்கை நுண்ணறிவு துறையில் தனியார் முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியா உலக அளவில் பத்தாவது இடத்தில் உள்ளதாக ஐ நா வர்த்தக மற்றும் மேம்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.
- நீட் தேர்வு விவகாரம் தொடர்பாக வரும் ஒன்பதாம் தேதி சட்டமன்ற அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறும் என்று தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- உலகக்கோப்பை குத்துச்சண்டைப் போட்டியில் இந்தியா மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மக்களவை நடவடிக்கைகள் இன்று மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

இன்று காலை மக்களவை கூடியதும் காங்கிரஸ் , திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா கூடுதல் வரி விதித்திருப்பது குறித்து பிரச்சினை எழுப்ப முயன்றனர்.

அவர்கள் அவையின் மையப்பகுதிக்குச் சென்று முழக்கங்களை எழுப்பிய நிலையில், வக்ஃப் மசோதா தொடர்பாக தெரிவித்த கருத்துக்கு காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி சோனியாகாந்தி மன்னிப்பு கேட்க வேண்டுமென்று வலியுறுத்தி பிஜேபி உறுப்பினர்களும் முழக்கங்களை எழுப்பினர்.

இதனால் ஏற்பட்ட அமளி காரணமாக மக்களவை முதலில் நண்பகல் 12 வரை ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் அவை கூடிய போது அவை நடவடிக்கைகள் மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்படுவதாக அவைத் தலைவர் திரு ஓம் பிர்லா அறிவித்தார்.

மாநிலங்களவையில் மேற்குவங்க ஆசிரியர் நியமனம் தொடர்பான பிரச்சினையை ஆளும் கட்சி உறுப்பினர்கள் எழுப்பியதால் திரிணமூல் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும், பிஜேபி உறுப்பினர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனால் ஏற்பட்ட அமளி காரணமாக அவைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் அவை நடவடிக்கைகளை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைத்தார்.

அவை மீண்டும் கூடியபோதும் அமளி நீடித்ததால் அவை நடவடிக்கைகள் பிற்பகல் ஒரு மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

[]<<<>>>[]

வக்ஃப் சட்டத்திருத்த மசோதா நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டிருப்பது சமூக பொருளாதார நீதியை நிலைநாட்டுவதற்கான அரசின் முயற்சிகளுக்கு வலு சேர்க்கும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் இந்த மசோதா மீதான விவாத்தில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்,

மேலும் நாடாளுமன்ற கூட்டுக் குழுவிடம் தங்களது கருத்துக்களைத் தெரிவித்த மக்களுக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

வக்ஃப் செயல்பாடுகளில் நீண்டகாலமாக வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புணர்வு இல்லாமல் இருந்ததுடன், ஏழை இஸ்மியர் மற்றும் இஸ்லாமிய பெண்களின் நலனில் கவனம் செலுத்தாமல் இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள மசோதா வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதுடன் இஸ்லாமிய மக்களின் உரிமையை பாதுகாக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளர்.

வலிமையான, உள்ளடக்கிய இந்தியாவை உருவாக்குவதுடன், நாட்டு மக்கள் அனைவரும் கண்ணியமாக வாழ்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு உறுதி பூண்டுள்ளதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

வக்ஃப் மசோதா நிறைவேற்றப்பட்டிருப்பது வரலாற்று சிறப்புமிக்கது என மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.

இதன்மூலம் வக்ஃப் வாரியத்தில் பன்னெடுங்காலமாக நிலவி வந்த ஊழல் மற்றும் அநீதிக்கு முடிவு கட்டப்பட்டு, சமத்துவத்துக்கு வழி வகை செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை அதிகரிக்க இந்த அமைப்பை வலுப்படுத்த வேண்டியது அவசியம் என பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தின் பாங்காங்கில் நடைபெற்று வரும் பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டில் உரையாற்றிய அவர், பிம்ஸ்டெக் நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்புக்கான 21 அம்ச செயல்திட்டத்தை முன்மொழிந்தார்.

இதன்படி பிம்ஸ்டெக் நாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தை அதிகரிக்க பிம்ஸ்டெக் வர்த்தக சபையை ஏற்படுத்துவதுடன், இந்த நாடுகளுக்கு இடையே உள்ளூர் பணத்தில் வர்த்தகம் மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களை ஆராய வேண்டுமென்று அவர் கூறியுள்ளார்.

தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் உள்ள வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் திரு நரேந்திரமோடி கேட்டுக் கொண்டார்.

முன்னதாக இந்த மாநாட்டையொட்டி பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளுக்கு இடையே பல்வேறு துறைகளிலும் ஒத்துழைப்பை மேம்படுத்த உறுதி பூண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மக்களின் வாழ்க்கையில் ஆக்கப்பூர்வமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை பிம்ஸ்டெக் நாடுகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த மாநாட்டின் இடையே திரு நரேந்திரமோடி, மியான்மர் ராணுவ ஆட்சியாளரான ஜெனரல் **Min aung haling**, பங்ளாதேஷ் அரசின் இடைக்கால தலைமை ஆலோசகர் திரு முகமது யூனூஸ் உள்ளிட்டோரை சந்தித்து பேசினார்.

**[]<<<>>>[]**

பழம்பெரும் ஹிந்தி திரைப்பட நடிகரும், இயக்குநருமான மனோஜ்குமார் மும்பையில் இன்று காலமானார். அவருக்கு வயது 87.

தேசப்பற்றை ஊக்குவிக்கும் வகையிலான திரைப்படங்களில் அவர் நடித்ததால் பாரத்குமார் என்று அழைக்கப்பட்டார்.

திரைப்படத்துறைக்கு மனோஜ்குமார் ஆற்றிய சிறப்பான பங்களிப்பிற்காக திரைப்படத் துறையின் உயரிய விருதான தாதா சாஹேப் பால்கே விருது, பத்மஸ்ரீ மற்றும் ஃபிலிம்பேர் உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்றுள்ளார்.

மனோஜ்குமாரின் மறைவுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திரமோடி, மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத்சிங், திரு அமித்ஷா, திரு எல் முருகன் உள்ளிட்டோர் ஆழந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா சத்தினஷ்கர் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நக்ஸலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து இன்று ஆய்வு செய்கிறார்.

இரண்டு நாள் பயணமாக சதிஷ்கர் செல்லும் அவர், மாவோயிஸ்ட் ஆதிக்கத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட பஸ்தார் மற்றும் ஹரியாபந்த் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்த உயர்மட்ட ஆலோசனைக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கிறார்.

இப்பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வது குறித்தும் அவர் ஆலோசனை நடத்தயுள்ளார்.

**[]<<<>>>[]**

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப துறையில் தனியார் முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியா உலக அளவில் பத்தாவது இடத்தில் உள்ளதாக ஐ நா வர்த்தக மற்றும் மேம்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

தொழில்நுட்பம் மற்றும் புதுமை கண்டுபிடிப்புகள் தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், முன்னணி தொழில்நுட்ப ஆயத்தக் குறியீட்டில் கடந்த 2022-ஆம் ஆண்டு 48-வது

இடத்தில் இருந்த இந்தியா 2024-ஆம்ஆண்டில் 36-வது இடத்திற்கு முன்னேறி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு துறையில் முதலீடுகளை ஈர்ப்பதில் அமெரிக்கா முதலிடத்திலும், சீனா இரண்டாவது இடத்திலும் உள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

மருத்துவ இளநிலை மாணவர் சேர்க்கைக்கான நீட் தேர்வு முறையை அகற்றுவதற்கான சட்டப்பூர்வ நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க வரும் ஒன்பதாம் தேதி சட்டமன்ற அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறும் என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் இன்று இதனைத் தெரிவித்த முதலமைச்சர், நீட் தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்கக்கோரி சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மத்திய அரசு நிராகரித்திருப்பதாகக் கூறினார்,

எனவே அடுத்தக்கட்ட நடவடிக்கைக் குறித்து விவாதிக்க இந்த கூட்டம் நடத்தப்படுவதாகவும், இதில் சட்டமன்ற கட்சித் தலைவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

தமிழகத்தில் மருத்துவக் கல்வி பயில விரும்பும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் கனவை நனவாக்க மாநில அரசு சட்டரீதியிலான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்றும் திரு மு க ஸ்டாலின் தெரிவித்தார்.

[]<<<>>>[]

பிரசித்திபெற்ற மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் சித்திரைத் திருவிழாவுக்கான முகூர்த்தக்கால் நடும் விழா இன்று வெகு சிறப்பாக நடைபெற்றது,

சித்திரைத் திருவிழாவின் முக்கிய அம்சமான கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளும் நிகழ்வு அடுத்த மாதம் 12-ஆம் தேதி நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - ரகுராஜா ) ---57 செகண்ட்*

[]<<<>>>[]

உலகக்கோப்பை குத்துச்சண்டைப் போட்டியில் இந்தியா மூன்று வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

பிரேசிலில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 60 கிலோ எடைப்பிரிவில் சச்சினும், 90 கிலோ எடைப்பிரிவில் விஷாலும், 50 கிலோ எடைப்பிரிவில் ஜாடுமணி சிங்கும் இப்பதக்கங்களை வென்றுள்ளனர்.

இப்போட்டியில் 70 கிலோ எடைப்பிரிவில் ஹிதேஷ் இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் லக்னோ – மும்பை அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

பெங்களூருவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரஜ்வால் தேவ் - நிதின்குமார் சின்ஹா இணை அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

**[]<<<>>>[]**